# 5

# எப்போதும் நல்ல தைரியம்

## (2 கொரிந்தியர் 4:8–5:10)

*"நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்" (5:7).*

சபையின் பழைய அறிக்கைகள் மற்றும் நமது ஆதாரமூலங்களின் பிற பதிவேடுகள் ஆகியவற்றைக் கொண்டு, நமது உள்ளூர் சபைக்குழமங்களின் வரலாற்றை நாம் எழுத வேண்டியிருந்தால், நடைமுறையில் ஒவ்வொரு சபையினாலும் ஒரு அம்சமானது அனேகமாகப் பொதுவானதாகப் பற்றிக்கொள்ளப் பட்டிருக்கும். நமது பதிவேடுகள், புதிய ஊழியங்களை மாபெரும் உற்சாகத்துடன் தொடங்கும் மாதிரி ஒன்றை வெளிப்படுத்தும், அதைத்தொடர்ந்து நம் மன எழுச்சி குறைந்து அழிந்துபோன பின்பு நமது ''சோர்ந்துபோகுதல்'' ஏற்பட்டிருக்கும். உதாரண மாக, பேருந்து ஊழியம் மற்றும் வீடு சந்திப்புத் திட்டம் ஆகியவை முதலில் அறிவிக்கப்பட்டபோது, நம்மால் பயன்படுத்தக்கூடியதற்கும் அதிகமான தன்னார்வத் தொண்டர்களைக் கவர்ந்திருக்கலாம். ஆனால் அடிக்கடி, இந்தத் திட்டங்களைக் கண்காணிக்க ஒருசிலரே விடப்பட்ட நிலையில், தொண்டர்கள் எல்லாம் எண்ணிக்கையில் குறைந்து விடுகின்றனர். அவர்களும் கூட அந்த வேலைக்கு "உற்சாகத்தை இழந்து விடுகின்றனர்." வலிவார்ந்த ஊழியங்களை விட்டுவிடுதல் பற்றிய ஒரு மாதிரி தரப்படுதல் நடக்கிறபோது, எந்த ஒரு புதிய ஊழியத்தைப் பற்றியும் நாம் சுலபமாக நம்பிக்கையற்றவர்கள் ஆகிவிடுகிறோம்.

இந்த மாதிரியானது, திறன் உள்ள மக்கள் பலரைத் தாங்கள் வேறுபாட்டை ஏற்படுத்தலாம் என்ற பல ஆண்டுகள் சிந்தனைக்குப்பின்பு "உற்சாகம் இழந்து" போகச் செய்துள்ளது. உற்சாகம் இழத்தல் என்பது தீவிரமான பிரச்சனையாக இருப்பதில்லை என்ற வகையில் சபையின் பல ஊழியங்களில் ஏதாவதொரு பகுதியை என்னால் நினைத்துப் பார்க்க முடிவதில்லை, பேருந்து ஊழியத்திற்கும் வீடு சந்திப்பு ஊழியத்திற்கும் பொறுப்பாளர்களாக வைக்கப்பட்டவர்கள் தங்கள் ஊழியத்திற்குத் தன்னார்வத் தொண்டர்களைப் பட்டியலிட முயற்சி செய்த விரிவான கால அளவிற்குப் பின்பு "இருதயம் சோர்ந்து" போய்விடுகின்றனர். ஞாயிறு வேதாகமப் பள்ளியின் ஆசிரியர் பல ஆண்டுகள் அளவாக ஒரேவிதமான கால அட்டவணையைக் கொண்டுள்ளார். மூப்பர்களும் ஊழியர்களும் முடிவற்ற பிரச்சனைகளை மாத்திரமே காண்கிற ஊழியத்தில் சுலபமாகக் களைப்படைந்து விடுகின்றனர். நம்மில் பலர், நாம் "ஒரு வேறுபாட்டை ஏற்படுத்துவோம்" என்று நினைத்து, திட்டங்களில் பிரவேசிக்கிறோம், ஆனால் பிற்பாடு நாம் அதைச் செய்வோமா என்று சந்தேகப்படுகிறோம். நமது ஊழியங்களுக்கு ஆபத்து என்பது நல்ல கருத்துக்கள் அல்லது திறனுள்ள மக்கள் ஆகியவற்றில் நாம் குறைவுபடுவதினால் அல்ல என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். நாம் "சோர்ந்து

*போகிறோம்" என்பதே நமது பிரச்சனையாக உள்ளது.*

*நாம் நேர்மையுள்ளவர்களாயிருந்தால், சபையின் பல ஊழியங்கள் ஏமாற்றம் ஏற்படுத்துபவையாக உள்ளன என்பதை நாம் ஒப்புக்கொள்வோம். ஞாயிறு வேதாகமப்பள்ளி ஆசிரியர், தாம் வேறுபாட்டை ஏற்படுத்துகிறோம் என்பதைக் காணுதல் கடினமாக உள்ளது. பிரசங்க மேடை ஊழியர், ஒவ்வொன்றையும் அளவிடுவதில் மகிழ்வடையும் ஒரு கலாச்சாரத்தில் வாழ்பவராக, அளவிடப்படக்கூடிய ஒருசில வெற்றிகளையே கொண்டிருக்கிறார். மறுரூபமான வாழ்வை நீங்கள் எவ்வாறு அளவிடுகிறீர்கள்? சபையைக் கட்டி எழுப்புவதில் உங்கள் முயற்சி தீர்மானமாக இருந்தது என்பதை நீங்கள் எவ்வாறு அளவிடுகிறீர்கள்? கணிசமான எண்ணிக்கையில் வளர்ச்சியுள்ள சபைகளிலும்கூட, ஆவிக்குரிய வளர்ச்சி சுலபமாக அளவிடப்படுவதில்லை. நமது வெற்றிகள், அளவிடப்பட சுலபமானவைகளாக இல்லாதிருப்பதால், நமது ஊழியம் ஒரு வேறுபாட்டை ஏற்படுத்தியுள்ளதைக் காண்பிக்க, உணரத்தக்க ஆதாரத்தை நாம் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். நமது வெற்றியைக் காண்பிக்க நாம், புதிய கல்வித் துறையையும், கடன் இல்லாத கட்டிடத்தையும், சபை வருகைப் பதிவேட்டையும் சுட்டிக்காண்பிக்கிறோம். ஆனால் காணக்கூடிய இந்த அடையாளங்களைக் காட்டிலும் அதிகமானவை ஒரு வெற்றிகரமான ஊழியத்திற்கு இருக்க வேண்டும் என்பதை நாம் அறிந்திருக்கிறோம்.*

*ஊக்கமிழந்திருத்தல் என்பது "இருதயம் சோர்ந்துபோகுதல்" என்பதாக உள்ளது.* RSV *வேதாகமம், 4:1, 16ல் இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்துகிறது. இந்த (egkakein என்ற) வார்த்தை, நமது சபைக்குழுமங்கள் "இருதயம் சோர்ந்து" போகும்போது அவை தனித்திருப்பதில்லை என்று கருத்துக்கூறுவதற்குப் போதிய அளவு, புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இருதயம் சோர்ந்து போவதற்கு எதிராகப் புதிய ஏற்பாட்டில் உள்ள புத்திமதியானது கிறிஸ்தவர்கள் எப்போதுமே ஊக்கமிழந்து போகின்றனர் என்பதைக் காண்பிக்கிறது. அநீதியான நியாயாதிபதியிடம் தனது வேண்டுகோளை விட்டுவிட மறுத்து விடாதுவேண்டிக் கொண்டிருந்த விதவைப்பற்றிய இயேசுவின் உவமையானது சீஷர்களை உற்சாகப்படுத்துவதற்காகக் கூறப்பட்டது: "சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபம்பண்ணவேண்டும் என்பதைக் குறித்து அவர்களுக்கு அவர் ஒரு உவமையைச் சொன்னார்" (லூக்கா 18:1). வரவிருந்த தேவனுடைய இராஜ்யத்திற்காகச் சீஷர்களின் ஜெபமானது எவ்வித விளைவுகளுமின்றி இருந்தபடியால் அவர் இந்த உவமையைக்கூறினார் என்பது தெளிவு.*

*பவுல் அடிக்கடி, கிறிஸ்தவர்கள் "சோர்ந்துபோய்விடாது" இருக்கும்படி ஆலோசனை தெரிவித்தார். அவர் கலாத்தியருக்கும் (6:9) தெசலோனிக்கேயருக்கும் (2 தெசலோனிக்கேயர் 3:13) "நற்கிரியைகள் செய்வதில் சோர்ந்து [egkakein] போய்விடாதிருக்கும்படி" கூறி எழுதினார். பவுலின் உபத்திரவங்கள் நிமித்தம் "சோர்ந்துபோய்விடாது" இருக்கும்படி எபேசியர்களுக்குக் கூறப்பட்டது. ஆகவே ஊழியம் என்பது "சோர்ந்துபோய்விடும்" படியான சோதனையை எதிர் கொண்டுள்ளது என்று பவுல் அறிந்திருந்தார்.*

*2 கொரிந்தியர் நிருபத்தில் இரண்டு சந்தர்ப்பங்களில் பவுல், "நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை" என்று கூறுகிறார் (4:1, 16). பவுல் இந்தக்கூற்றைத் திரும்பவும் கூறுகிறார் என்ற உண்மையானது, கொரிந்தியர்களுடனான அவரது கலந்துரையாடலில் இது அவருக்குக் குறிப்பாக முக்கியமானதாக உள்ளது என்று*

கருத்துத் தெரிவிக்கிறது. பவுலின் ஊழியத்திற்கு அறைகூவல் விடுத்து அவர் ஊக்கமிழந்து போகவேண்டும் என்று கருத்துத் தெரிவித்தவர்களுக்குப் பவுல் பதில் அளிக்க வேண்டியிருந்தது என்பது தெளிவு! அவரது பலவீனம், அவரது வலுவற்றதன்மை மற்றும் அவரது பல தோல்விகள், அவர் தோல்வியடைந்த ஒரு மனிதராக இருப்பார் என்று அர்த்தப்படுத்தியிருக்க வேண்டும்! மனித தர அளவையின்படி, அவரது ஊழியம் ஒரு தோல்வியாக இருந்தது. கொரிந்துவில் இருந்த சபை எவ்வளவு பெரியதாக இருந்தது என்று நாம் அறிவதில்லை, ஆனால் அது தொல்லை மிகுந்த மற்றும் கலகம் விளைவிக்கும் சபையாக இருந்தது என்று நாம் அறிகிறோம். பவுல் தமது உடல் நலம் குன்றும் அளவுக்குத் தம்மை ஒப்புக்கொடுத்திருந்தார் என்பதையும் வெற்றியின் அடையாளங்கள் எதுவும் இருக்கவில்லை என்பதையும் எதிராளிகள் உற்றுக்கவனித்தபோது, இழந்து போகப்பட்ட ஒரு காரணத்திற்காகத் தம்மையே கொடுத்திருக்கையில் அவர் "அழிந்து போயிருந்த" (4:16) உடலைக் கொண்ட ஒரு மதியீனமான உருவமாக இருந்தார் என்று அவர்கள் உரிமைகோரினர்.

ஊக்கமிழந்து போவதிலிருந்து ஒருவர் தம்மை எவ்வாறு காத்துக்கொள்கிறார்? பவுல் "சோர்ந்து போக" வேண்டும் என்று உரிமை கோரியவர்களுக்குப் பவுலின் பதில்கள், நம்மில் பவுலைப் போல், காணக்கூடிய நமது வெற்றிகளைச் சுலப மாக அளவிட முடியாதிருப்பவர்களுக்கு உதவிநிறைந்ததாக இருக்கும். 4:16-5:10ல் பவுல், மற்றவர்கள் நிர்ப்பந்தித்த வெற்றியின் தர அளவைகளுக்கு ஏற்ப இராதபோதிலும் தாம் ஏன் தமது ஊழியத்தைத் தொடர்ந்தார் என்பதற்குக் காரணத்தைக் கொடுக்கிறார்.

## நாம் காணப்படுகிறவைகளை நோக்கியிருப்பதில்லை (4:16-18)

மேலோட்டமாகக் காணுகையில், பவுல் ''சோர்ந்துபோவதற்கு'' காரணங்களைக் கொண்டிருந்தார். அவரது ''புறம்பான மனுஷன் அழிந்துகொண்டிருந்தது'' (4:16). ஊழியம் செய்யாது விட்டு விடுதலுக்கு, நிலையான "துன்பம்" என்பது சாத்தியமான ஒரு காரணமாக உள்ளது. பலரைப் பொறுத்தமட்டில், அது அவர் ஒரு தோல்வியாளராக இருந்தார் என்பதற்குச் செயல்விளக்கமாக இருந்தது. 2 கொரிந்தியர் நிருபம் முழுவதிலும், பவுலின் சரீர பலவீனம் மற்றும் துன்பம் என்பதே பிரச்சனையாக இருந்துள்ளது (இ.வ. 4:7, 8). அவர், இயேசு கிறிஸ்துவுக்காக எந்நேரமும் "மரித்துக் கொண்டிருந்தார்" (4:10, 11; இ.வ. 1 கொரிந்தியர் 15:31; ரோமர் 8:36). அவர் அழைக்கப்பட்டிருந்த ஊழியம், ஊக்கமிழந்து போவதற்கு, மனித நிபந்தனைகளில் ஒவ்வொரு காரணத்தையும் அவருக்குக் கொடுத்திருந்தது.

ஒருவரது முயற்சிகள் எங்கும் செல்லாதிருக்கையில், அவர் "சோர்ந்து போவதில்" எவ்வாறு தவற முடியும்? நம்மில் பெரும்பான்மையானவர்கள், நமது ஊழியம் விளைவுகளைக் கொண்டு வரும் என்று நாம் விசுவாசித்தால், வசதிக்குறைவையும் வேதனையையும் சகிக்க முடியும். ஒரு எதிர்காலத்தை நாம் இனியும் காணாதிருக்கும் போது, நாம் விட்டுவிட விரும்புகிறோம். ஒருவேளை, நமது தியாகங்கள் நம்மை எங்கும் வழிநடத்திச் செல்லாதிருப்பதைக் காணும்போது, சபையில் நமது முயற்சிகளில் பல கொஞ்சம் கொஞ்சமாக மரிக்

கின்றன.

பவுல் விசுவாசக் கண்கொண்டு பார்த்தபோது, தியாகத்திற்கும் விளைவுகளுக்கும் இடையில் அவரை ஊக்குவிக்கும் உறவுமுறையை அவரால் கண்ணோக்க முடிந்திருந்தது. ''அழிந்து போகுதல்''மற்றும் உபத்திரவங்கள் ஆகியவை "புறம்பான மனுஷன்" என்ற பௌதீக உடலுடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன (இ.வ. 12:9 முதல்). அவரது உடலானது, அவரது ஊழியத்தின் இறுக்கம் மற்றும் பிறரால் உபத்திரவப்படுத்தப்பட்ட வேதனை ஆகியவற்றின் மூலமாக, அழிவின் செயல்முறையில் இருந்திருக்கலாம், ஆனால் அவரது உண்மையான இருப்பு என்பது அடிக்கப்படுதல்கள் மற்றும் உறக்க மற்ற இரவுகள் ஆகியவற்றினால் அழிக்கப்படக் கூடாததாக இருந்தது. பவுலின் உபத்திரவங்கள் ''வெகுசீக்கிரத்தில் நீங்கிவிடுபவையாக'' (*elaphron*) மற்றும் "இலேசானவையாக'' (*parautika*) இருந்தன. முதல் சொற்றொடர், நித்திய மானதாக உள்ள மகிமையுடன் ஒப்பிடும்போது அவரது உபத்திரவங்கள் அற்பமா னவைகளாக உள்ளன என்று கருத்துத் தெரிவிக்கிறது. அதாவது, அவரது ஊழியத்தின் நித்திய விளைவுடன் ஒப்பிடுகையில் அவரது பாடுகள் அற்பமான வைகளாக இருப்பதால், அந்தப் பாடுகள் [அவற்றின்] விளைவுகளுக்கு ஒப்பானவையாக இருப்பதில்லை.

கடினமான பணியில் ஈடுபட்டுள்ள எவரேனும் ஒருவர், அந்தப் பணிப்பொறுப்பு "நித்தியமானதாக" இருந்தது என்று உணர்ந்துள்ளார். ஒருவர் ஒரு தொழிலைக் கற்றுக்கொள்ளப் பள்ளிக்குச் செல்லும்போது பிரிவாற்றாமையின் ஆண்டுகள் முதலில் அவருக்கு நித்தியமானதாகக் காணப்படலாம். நான் கல் லூரியில் இருந்தபோது, நித்தியத்திற்கும் நீடித்திருப்பதாகக் காணப்பட்ட, கடின மான கோடைகாலப் பணிகளை நான் நினைத்துப் பார்க்கிறேன். இப்போது பல ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், அந்தக் கோடைகாலங்கள் எவ்வளவு சுருக்கமா னவையாக இருந்தன என்று நான் காண்கிறேன். இவ்வகையான கருத்து நோக்கமானது பவுலை ஊக்கமிழந்து இருப்பதிலிருந்து தடைசெய்கிறது. ''நித்திய கனமகிமை''யுடன் ஒப்பிடும்போது, கணநேரத்திற்கு இருக்கும் உபத்திரவங்கள் அற்பமானவையாக உள்ளன, ஒருகணம் மாத்திரமேயான வேதனை, நமது வழியை விட்டு வெளியேற்றுவதற்கு வெறும் தொல்லையாக இருப்பதில்லை. அது நித்திய கனமகிமையை "நமக்கு உண்டாக்குகிறது." நமது ஊழியங்கள் எப்போதுமே, அளவிடக்கூடிய வெற்றியின் அடையாளங்களைக் கொண்டிராதது ஏன் என்பதற்கு ஒரு காரணம் உள்ளது; நமது தெளிவான தோல்விகள் நம்மை, நிகழ்காலத்தில் நாம் காண முடியாதிருக்கிற உண்மையான விளைவுகளுக்கு நம்மைத் தயார் செய்கின்றன.

எதிர்காலத்தின் மீதிருந்த நம்பிக்கையானது பவுலின் ஊழியத்தை ஜீவனுள்ள தாகக் காத்துக் கொண்டது. ரோமருக்கு அவர், ''ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்" என்று எழுதினார் (ரோமர் 8:18). அவர் பின்வரு மாறு கேட்டார்:

> உமதுநிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல் எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும், கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?

*உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாச மோசமோ, பட்டயமோ? (ரோமர் 8:35, 36).*

*எதிர்காலத்தைப் பற்றிய அவரது உறுதிப்பாடு, ஊக்கமிழத்தல் என்பது அவரில் வளர்ந்து விடாத நிலையில் தொடர்ந்து செயல்பட அவருக்கு நம்பிக்கை அளித்தது.*

*நமது சபைக்குழுமங்கள், தோல்வியுற்ற திட்டங்கள் மற்றும் "சோர்ந்து போன" நடத்துனர்கள் பற்றிய வரலாறு ஒன்றைக் கொண்டிருந்தால், நாம் நமது யுகத்தின் பொறுமையின்மைக்குப் பலியானவர்களாயிருக்கச் சாத்தியம் உள்ளது. அற்பமான விளைவுகளுக்கு மிகவும் பெரிய தியாகங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது என்று கூறும் மனநிலை, எதிர்காலம் பற்றிய பவுலின் உன்னதமான சித்திரத்தைப் பற்றிக்கொண்டிருக்கவில்லை. நமது திட்டம் "விலை செலுத்துகிறதாக" உள்ளது என்று நிரூபிப்பதற்கு உடனடி விளைவுகளுக்கான நமது வற்புறுத்துதல், நமது ஊழியங்கள் விசுவாசத்தில் குறைவுபட்டுள்ளன என்று சுட்டிக்காட்டுகிறது. வெற்றியின் காணக்கூடிய அடையாளங்களை வேண்டிக்கேட்கும் அணுகுமுறையில் அபாயம் ஒன்றுள்ளது. இதற்கு நேர்மாறாகப் பவுலின் நம்பிக்கையுள்ள ஆவியானது, காணப்படாதவற்றில் அவர் கொண்டுள்ள உறுதிப்பாட்டிலிருந்து வளர்ந்தது:*

*"மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, ... ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்" (4:18).*

*பவுலின் ஊழியத்தை விமர்சித்துக் கொண்டிருந்தவர்கள் "புறம்பான மனுஷனை" மாத்திரம் அளவிட்டிருந்தனர், மற்றும் அது ஒவ்வொரு அம்சத்திலும் மனதை ஈர்க்காததாக இருந்ததை அவர்கள் காணமுடிந்தது. ஆனால் இந்த ஊழியருக்குள் "காணப்படாததாக" மற்றும் அளவிட இயலாததாக ஒரு விஷயம் இருந்தது. அது "நாளுக்கு நாள் புதிதாக்கப்பட்டுக்" கொண்டிருந்த "உள்ளான மனுஷன்" என்பதாக இருந்தது (4:16). ஒரு மகிமையான எதிர் காலம் பற்றிய பவுலின் உறுதிப்பாடுகளினால் அவர் ஊக்கப்படுத்தப்பட்டு மாத்திரம் இருக்கவில்லை,அவர் பலப்படுத்தப்பட்டுக்கொண்டும் இருந்தார். அந்த எதிர்காலம் தொடங்கும் வரையிலும் அவரது கிறிஸ்தவ வாழ்வு அவரை இளைப்படையச் செய்யும் வேதனை நிறைந்த கொடும் தண்டனையைக் காட்டிலும் அதிகாமானதாக இருந்தது. 4:16ல் "நாளுக்குநாள்" நடந்து கொண்டிருப்பது என்ன என்பதன் மீது ஒரு வலியுறுத்தம் உள்ளது. "புறம்பான மனுஷன் அழிகிற" அதேவேளையில், "உள்ளான மனுஷன்" புதிதாக்கப்பட்டுக்கொண்டிருந்தது. கிறிஸ்தவ வாழ்வு என்பது காணப்படாத மகிமையுள்ள எதிர்காலத்தைக் காட்டிலும் அதிகமானதை உள்ளடக்கியிருக்கிறது என்பதைப் பவுல் அறிந்திருந்தார்; ஒரு மகிமையுள்ள நிகழ்காலமும் காணப்படாததாக இருக்கிறது. அளவிடக்கூடிய விளைவுகளையும் காணக்கூடிய அடையாளங்களையும் வலியுறுத்துபவர்கள், "நாளுக்குநாள்" நடந்துக்கொண்டிருப்பது என்ன என்பதைக் காணாதிருக்கலாம். ஆனால் நிகழ்காலமும் நல்லதாக உள்ளது என்பதைப் பவுல் விசுவாசத்தின் மூலமாக அறிகிறார்.*

*ஒவ்வொரு நாளும் பல இடர்ப்பாடுகளின் மத்தியில் நடந்துகொண்டிருப்பதைப் பவுல் "புதிதாக்கப்படுதல்" என்று அழைக்கிறார்*

*(4:16). இந்த நிருபத்தின் வேறொரு இடத்தில் அவர், எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் பொதுவாக உள்ள அனுபவத்தைப் பற்றிப் பேசுகிறார்: அவர்கள் "புதுசிருஷ்டிகள்" ஆகும் வேளை (5:17). ஆனால், தேவனுடைய வல்லமையின் மூலம் "புதியது" ஆகுதல் என்பது அந்த ஒரே நிகழ்ச்சியுடன் மட்டுப்படுத்தப்படுவதில்லை. அவர்களின் "புதிதாகுதல்" என்பது தொடரும் நிகழ்வாக உள்ளது; அவர்களைத் தொடர்ந்து செல்லச் செய்கிற ஒரு வல்லமை யாக இருக்கிறது. நமக்குள் "புதிதாக்கப்பட்டுக் கொண்டிருக்கும்" பகுதி பற்றிய இந்தக் குறிப்பு, தேவனுடைய ஊழியக்காரர் "மறுரூபப்படுகிறது" பற்றிய முந்திய கூற்றைப் போலுள்ளது (3:18). இவ்விரு நிகழ்ச்சிகளுமே, கிறிஸ்தவர் "சோர்ந்துபோவதிலிருந்து" தம்மைக் காத்துக்கொள்ள ஆதாரமூலங்களும் வல்லமையும் கொண்டிருக்கிறார் என்ற உறுதிப்பாட்டை உள்ளடக்கி இருக்கின்றன. அந்த வல்லமையானது, தேவன் அவருக்கு நியமித்துள்ள பணிப்பொறுப்புக்களுக்கு அவரை "நாளுக்கு நாள்" தகுதியாக்குகிறது என்பதை அவர் அறிகிறார்.*

*கிறிஸ்தவரில் தொடர்ந்து நடைபெறும் புதுப்பித்தலைப் பற்றிப் புதிய ஏற்பாடு குறிப்பிடுகிறது. ரோமருக்குப் பவுல், "நீங்கள் இந்தப் பிரபஞ்சத் திற்கு ஒத்த வேஷந்தரியாமல், ... உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமா குங்கள்" என்று எழுதுகிறார் (ரோமர் 12:2). கொலோசெயருக்கு அவர், "தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே" என்று எழுதுகிறார் (கொலோசெயர் 3:10). புதிதாக்குதல் என்பது நம்முடையதல்ல ஆனால் தேவனுடைய வேலையாக உள்ளது. ஊழியத்தின் பணியானது நமது சொந்த ஆதாரமூலங்களைச் சார்ந்துள்ளது என்று நாம் நம்புகிறபோது, நாம் தவறுகிறோம். தேவன் நம்மைக் கைவிட்டுவிடவில்லை என்று நாம் ஒப்புக்கொள்கிறபோது, நாம் "சோர்ந்துபோவதில்லை."*

*"எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது" என்ற பவுலின் கூற்றில் ஒரு நேர்மாறு/ முரண்பாடு காணப்பட முடியும். அவர் தமது உடலானது பலத்தை இழக்கும் அதே வேளையில் தாம் புது பலத்தை ஆதாயப்படுத்திக் கொண்டிருப்பதில் நிச்சயமாயிருக்கிறார். இந்தப் புதுபலம், நமக்குள் "அழியாமல்" இருக்கும் பகுதியான "உள்ளான மனுஷனுக்கு" உரியதாகும். நமது உடல்கள், 4:8-10ல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வேதனைகளுக்கும் உட்படலாம், ஆனால் இந்த பலவீனம் நமது உள்ளான மனுஷனைப் பாதிப்பது இல்லை. "உள்ளான மனுஷன்" என்ற நம்முடைய பகுதியானது சிந்திப்பதாகவும் சித்தம் கொள்வதாகவும் உள்ளது. இதைப் பவுல் ரோமர் 7:22ல் குறிப்பிடுகிறார். எபேசியர் 3:16-19ல் அவர் ஒரு அழகிய ஜெபத்தைக் கொண்டுள்ளார், "நீங்கள் அவருடைய [கிறிஸ்துவினு டைய] ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், ... அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்." பவுலைப் பொறுத்த மட்டில், அவரது பலவீனத்தில் பலம் இருந்தது, ஏனெனில் அடிக்கப்படுதலோ அல்லது உறக்கம் இல்லாத இரவோ, அவருக்குள் இருந்த, பொருட்படுத்தப்பட வேண்டிய, நித்தியத்திற்கு நியமிக்கப்பட்ட பாகத்தின் பலத்தை இளைப்படையச் செய்ய முடியாதிருந்தது.*

*பவுலின் ஊழியத்தை விமர்சனம் செய்த அவரது எதிராளிகள், உள்ளான நபரின் வல்லமை காணப்படவும் அளவிடவும் முடியாததாக உள்ளது என்பதை நம்புவதில் சிரமம் கொண்டிருந்தனர் என்பதில் சந்தேகம் இல்லை. பவுலின் விசுவாசத்தைக் காட்டிலும் அவர்களின் கேட்புகள் நமக்கு மிகுந்த ஆறுதல் அளிப்பதாக உள்ளது! உள்ளான ஆதாரமூலங்கள், பலத்தின் காணப்படக்கூடிய அடையாளங்கள் என்ற வகையில் சபைத் தகவல் குறிப்பில் அறிக்கை இடப்பட இயலாது. அது போன்றே, நமது ஊழியங்கள் நமது உள்ளான ஆதாரமூலங்களின் அடிப்படையில் நம்பகமானவையாக உள்ளன என்று எவரொருவருக்கும் நாம் சுலபமாகப் புரியவைக்கவும் முடியாது. நம்மை ஊக்குவிப்பவைகளான காணக்கூடிய அடையாளங்களுக்கான விருப்பத்தை நாம், பவுலை விமர்சனம் செய்தவர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம். உற்றுநோக்கப்பட இயலாததாக இருந்த பவுலின் வல்லமையின் அனுபவம் அவரை "சோர்ந்துபோவதில்" இருந்து தடைசெய்தது.*

*நாம் இந்த மதிப்புமிக்க பாடத்தைக் கற்றுக்கொண்டால், நமது ஊழியங்களை நாம் ஒரு முற்போக்கான புதிய வழியில் கண்ணோக்குவோம். நாம் தோல்வியுற்றவர்களாகத் தோன்றும் அதே இடத்தில் நம்மால் பலத்தைக் கண்டறிய முடியும். தோல்வியாகக் காணப்படும் ஊழியங்கள் புதிய பலத்தைக் கண்டறிவதற்கான சந்தர்ப்பங்களாக இருக்கும், சபைத்திட்டங்களில் ஏற்படும் சலிப்புகள், நமக்கு ஆவிக்குரிய வகையில் வளர்வதற்கான சந்தர்ப்பமாக இருக்கும். நமது விசுவாசத்திற்கு அறைகூவல் விடுக்கும் சுகவீனமானது, ஆவிக்குரிய ஆதாரமூலங்களை மேம்படுத்த நம்மை அனுமதிக்கும். நம்பகமான கிறிஸ்தவமானது "புறம்பான மனுஷனில்" வெற்றியை அல்ல, ஆனால் அளவிட இயலாத "உள்ளான மனுஷனின்" பலத்தையே கண்ணோக்குகிறது.*

## *நாம் நல்ல தைரியம் உள்ளவர்களாக இருக்கிறோம் (5:1-10)*

*5:1-10ல் பவுல், "காணப்படாதவை" மற்றும் "நித்திய" விஷயங்களை மாபெரும் விபரமாக விவரிக்கிறார். அவற்றை விவரிக்க விரிவிளக்கமான உருவகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. நமது வலிமையற்ற "கூடாரத்திற்கு" பதிலியாக வைக்க நாம் ஒரு "கட்டிடத்தை" கொண்டுள்ளோம். உடைகளின் புதிய அமைவு ஒன்றை நாம் அணிந்துகொள்ளும் அதே வகையில் "பரலோகத் திலிருந்து வரும் நமது வாசஸ்தலத்தை" நாம் "தரித்துக்" கொள்வோம் (5:2). நமது புதிய வாசஸ்தலத்தை நாம் தரித்து கொள்வதினால், நாம் ஒருக்காலும் "நிர்வாணிகளாய்க்" காணப்படமாட்டோம் (5:3). இவ்வார்த்தைகள் புரிந்துகொள்ளச் சுலபமானவைகளாக இருப்பதில்லை. எதிர்காலத்தைப் பற்றிய பவுலின் வார்த்தைகளை, எதிர்கால வாழ்வு பற்றிய விரிவான நமது சொந்த சித்தரிப்பை உண்டாக்குவதற்குப் பயன்படுத்துதல் என்பதே, நமது இயல்பான சாய்தலாக உள்ளது. பவுல், கிறிஸ்துவுடன் தாம் இருக்கப்போகும் வேளை பற்றிய தமது நம்பிக்கையைப் பற்றி அடிக்கடி பேசினார் (பிலிப்பியர் 1:23). 1 கொரிந்தியர் நிருபத்தில் அவர், கர்த்தருக்குரியவர்கள் அவருடன் ஜீவனுள்ள வர்கள் ஆக்கப்படும் வேளையாகிய கிறிஸ்துவின் மறுவருகையைப் பற்றிப் பேசினார் (1 கொரிந்தியர் 15:23). 1 மற்றும் 2 தெசலோனிக்கேயர் நிருபங்களில்*

*அவர், கர்த்தருடைய மறுவருகையின் நாள்பற்றி விரிவளவாக விவரித்தார். இந்த வசனப்பகுதிகள் யாவும் எவ்வாறு ஒன்றாகப் பொருந்துகின்றன என்று அறிய விரும்புதல் என்பது நமக்கு இயல்பானதாகவே உள்ளது. எப்போது நாம், நமது "பரம வாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்வோம்"? இப்போது நாம் இந்த வாசஸ்தலத்தை எந்தக் கருத்தமைவில் "கொண்டிருக்கிறோம்"? "எவ்வாறு" மற்றும் "எப்போது" என்பதன் கேள்வியானது பல ஆண்டுகளாக மக்களைக் கவர்ந்திருக்கிறது.*

*கடந்த பத்தாண்டில், காலத்தின் முடிவு என்ற பாடக்கருத்தைக் காட்டிலும் வேறு எந்தப் பாடக்கருத்தும் மக்களின் திரளான எண்ணிக்கையை அதிகமாய்க் கவர்ந்ததில்லை என்று நாம் உற்றுக்கவனித்துள்ளோம். நமது வரலாற்றைத் தேவன், எவ்வாறு மற்றும் எப்போது முடிவுக்குக் கொண்டுவருவார் என்று அறியவிரும்பும் பல லட்சக்கணக்கான மக்களுக்கு, அவைபற்றிய திரைப்படங்களும் பிரபலமான புத்தகங்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. அவர்கள் பவுலைக் காட்டிலும், யூகத்துவமான கேள்விகள் மீது அதிகம் ஆர்வமுள்ளவர்களாக இருக்கச் சாத்தியமுண்டு. 5:1-4 என்ற கடினமான வசனங்களில், பவுல் விவரிக்க இயலாததை விவரிக்க முயற்சி செய்கிறார். அவர், இப்போது நாம் குடியிருக்கும் அழிந்துபோகிற கூடாரத்திற்கும், தேவன் ஆயத்தம் செய்துள்ள வாசஸ்தலத்திற்கும் இடையிலான பெருத்த வேறுபாட்டைச் செயல்விளக்கப்படுத்த விரும்புகிறார். ஒன்று காணக்கூடிய விஷயங்களுக்கு உரியதாகவும் இன்னொன்று காணப்படாத உலகத்திற்கு உரியதாகவும் உள்ளன.*

*"பூமிக்குரிய கூடாரம்" என்பது உடலுக்கு ஏற்புடையதொரு உருவகமாக உள்ளது. ஏசாயா 38:12 வசனம், எசேக்கியா அரசர் சுகவீனத்தில் இருந்து மீண்டபின்பு கூறிய வார்த்தைகளைப் பதிவு செய்துள்ளது:*

> *என் ஆயுசு மேய்ப்பனுடைய கூடாரத்தைப் போல என்னைவிட்டுப் பெயர்ந்துபோகிறது; நெய்கிறவன் பாவை அறுக்கிறதுபோல என் ஜீவனை அறுக்கக் கொடுக்கிறேன்; என்னைப் பாவிலிருந்து அறுத்துவிடுகிறார்; இன்று இரவுக்குள்ளே என்னை முடிவடையப்பண்ணுவீர்.*

*யோபு, "மண் வீடுகளில் வாசம்பண்ணுகிறவர்களின்" (யோபு 4:19) நிலையற்றதும் வேதனை மிகுந்ததுமான வாழ்வைப்பற்றி விவரிக்கிறார். கூடாரத்தின் உருவகமானது, நமது சரீரப்பிரகார இருப்பு என்பது எவ்வளவு நிலையற்றதாக உள்ளது என்பதைக் கருத்தாகத் தெரிவிக்கிறது. பவுல், இந்தக் கூடாரத்தில் வாழ்வு என்பது புலம்பலும், பெருமூச்சும் மன உலைச்சலும் நிரம்பியது என்று விவரிக்கிறார் (5:2, 4). இந்த "பூமிக்குரிய கூடாரம்" நிச்சயமாகவே அழியக்கூடியதாக உள்ள வலிமையற்ற பொருளால் ஆனதாக உள்ளது (5:1).*

*பவுலின் ஊழியத்தை விமர்சித்தவர்கள் காணப்படுகிறவைகள் - "பூமிக்குரிய கூடாரத்தில்" வாழ்ந்த ஒருவரின் புலம்புதல், பெருமூச்சு விடுதல் மற்றும் மன உலைச்சல் ஆகியவை - மீது கவனம் குவித்தனர். அவர்கள், இற்றுப்போய்க்கொண்டிருந்த ஒரு "கூடாரத்தில்" உற்றுப்பார்த்து, அவரது ஊழியம் வீணானதாக இருந்தது என்று முடிவு செய்தனர். ஆனால் பவுல் கண்ணோக்கத்தின் மாறுபட்ட தர அளவை ஒன்றைக் கொண்டுள்ளார். அவர், "நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்" என்று கூறுகிறார்.*

*(5:6). அவர் வலிவற்ற இந்தக் கூடாரத்திற்குப் பதிலாக நிலையான நம்பகமான கட்டிடம் ஒன்று நிறைவில் தரப்படும் என்று அறிந்திருந்ததால், காணக்கூடிய தர அளவைகளைக் கொண்டு தமது ஊழியத்தை நடத்த மறுத்தார். இந்தக் கட்டிடம், "கைவேலையல்லாத நித்திய வீடாகப் பரலோகத்திலே" இருந்தது (5:1). அவர் இந்த நித்திய வாசஸ்தலத்தைக் கொண்டிருந்ததை "அறிந்த" (5:1) படியால், தற்காலத்தில் புலம்பலையும் பெருமூச்சையும் அவரால் தாங்கிக்கொள்ள முடிந்தது.*

*"தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடத்தல்" என்பது (5:6) கிறிஸ்தவரின் அடையாளமாக உள்ளது. பவுலின் எதிராளிகளைப்போல் நாமும் "தரிசித்து நடத்தலை" மிக சுலபமானதாகக் காண்கிறோம். சிலர், கிறிஸ்தவ வாழ்வு என்பது ஏற்கனவே "இந்த உலகத்தில் இருந்து வெளியே" இருத்தல் என்பதை உள்ளடக்கியிருப்பது போன்றும், மன உலைச்சல் மற்றும் சலிப்பில் இருந்து தூரத்தில் விலக்கிவைக்கப்பட்டிருப்பது போன்றும் நினைப்பதை விரும்பித் தேர்ந்து கொள்கின்றனர். ஒருவேளை, கிறிஸ்தவ வாழ்வு என்பது "இந்த உலகிலிருந்து வெளியே" இருந்தது என்று பலர் வலியுறுத்திய காரணத்தினால், மூன்றாம் வானத்தில் பவுலின் அனுபவம் பற்றி, 12:2ல் அவரது குறிப்பானது சரியாகவே எழுதப்பட்டிருக்கலாம். 5:14ன்படி, வரலாற்றின் இன்னொரு பக்கம் உள்ளது. நாம் பரலோக வாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்ள காத்துக்கொண்டு "வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம்." நாம் "விசுவாசித்து நடக்கையில்" நாம் "பாரஞ்சுமந்து தவிக்கிறோம்" (5:4). காணக்கூடிய அடையாளங்களின் அடிப்படையிலான விசுவாசம் என்பது விசுவாசமே அல்ல* (cf. *ரோமர் 8:24). விசுவாசம் என்பது, உலகத்தில் தேவனுடைய கிரியைக்கான ஆதாரத்தை நாம் காணமுடியாதிருக்கும்போது, தேவனில் நாம் நம்பிக்கை வைப்பதை உள்ளடக்குகிறது. அது நேர்மையான பயன் என்பது பார்வையில் இராதபோது, இயேசுவின் சிலுவையில் பங்கேற்பதை உள்ளடக்குகிறது. நம்பக மான கிறிஸ்தவம் என்பது, நம்மால் காண இயலாதவற்றின்மீது நமது வாழ்வைக் கட்டுவதுடன் வருகிற மன உலைச்சலை ஏற்றுக்கொள்வதை உள்ளடக்குகிறது. இன்னும் அதிகமானவை வரவிருக்கின்றன என்பதை நாம் அறிகிறோம்.*

*ஜெர்மனி நாட்டின் கொலோன் என்ற நகரத்தின் சிறைச்சாலையில் உள்ள அறை ஒன்றின் சுவரில், இரண்டாம் உலகயுகத்தின் வன்முறை மற்றும் பெருவருத்தத்தின்போது கிறுக்கப்பட்டு இருந்தவை, பவுல் பற்றிக்கொண்ட விசுவாசத்தின் அறிக்கைபோன்று குறிப்பிடத்தக்கதாக இருந்தது:*

> *சூரியன் பிரகாசிக்காதபோதும்கூட, நான் அதில் நம்பிக்கை கொள்கிறேன். அன்பை நான் உணராதிருக்கும்போது கூட, நான் அதில் நம்பிக்கை கொள்கிறேன். தேவன் அமைதியாயிருக்கும்போது கூட, நான் அவரில் நம்பிக்கை கொள்கிறேன்.*

*பரலோக வாசஸ்தலத்தைக் காண இயலாத நிலையிலும்கூடப் பவுல் தேவன் மீது நம்பிக்கை வைப்பதைத் தேர்ந்துகொண்டார்.*

*5:1ல் பவுல் "தேவனால் உண்டான வீடு ஒன்று பரலோகத்தில் உள்ளது என்று நாம் அறிந்திருக்கிறோம்" என்று, அவரால் அதைக் காண இயலாத நிலையிலும் கூறுகிறார். சரீரம் (கூடாரம்) அழிகையில், நாம் நமது புதிய உடையணிகளைத்*

*“தரித்துக்கொள்வோம்” என்பதால், நாம் ஒருக்காலும் “நிர்வாணிகளாக” இருக்கமாட்டோம் என்பதில் அவர் உறுதியாயிருக்கிறார் (5:3). நாம் அணிந்துகொள்ளவிருக்கும் இந்தப் புதிய “உடைகளுக்கு” மூன்று மாறுபட்ட சொற்றொடர்களைப் பவுல் பயன்படுத்துகிறார். நாம் ஒரு “கட்டிடத்தை”* (*oikodome*), *ஒரு “வீட்டை”* (*oikia*) *மற்றும் ஒரு “வாசஸ்தலத்தை”* (*oiketerion*) *கொண்டிருக்கிறோம். இவ்வார்த்தைகள், எதிர்கால இல்லத்தின் நிலைத்த தன்மை யையும் மேன்மையான தரத்தையும் கருத்தாகத் தெரிவிக்கின்றன. இவைகள், நமது உடல்நலம் தவறினாலும், தேவனுடனான நமது உறவு ஒருக்காலும் ஒழிந்துபோவதில்லை என்பதை நமக்கு நினைவூட்டுகின்றன. தேவனு டனான நமது எதிர்காலத்தை விரிக்க நாம் பல மாறுபட்ட உருவங்களைப் பயன்படுத்தலாம், ஆனால் அவை எல்லாவற்றிற்கும் பின்னால் ஒரு உறுதிப்பாடு உள்ளது: முடிவில்லாத வாழ்வு ஒன்றைத் தேவன் நமக்கு வாக்குத்தத்தம் செய்துள்ளார். நிறுத்தப்பட இயலாத ஒரு கொள்கையில் நாம் ஊழியம் செய்துகொண்டிருக்கிறோம்.*

## முடிவுரை

*எதிர் காலத்தைப் பற்றி யூகம் செய்வதிலோ அல்லது முடிவின் “எவ்வாறு” மற்றும் “எப்போது” என்ற எல்லா இடைவெளிகளையும் நிரப்புவதிலோ, பவுல் ஆர்வம் கொண்டிருந்தது இல்லை. தவறுகிற தமது உடல்நலத்துடன், விளைவுகளில் தமக்கு ஏற்பட்ட குறைவின்போது, தாம் ஒருக்காலும் ஊக்கமிழந்திராதது ஏன் என்பதற்கு ஒவ்வொரு காரணத்தையும் அவர் தமது எதிராளிகளுக்குக் காண்பிக்க விரும்பினார். பவுலின் எண்ணப்போக்கு பின்வருமாறு இருந்தது: “எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம்” (5:7;* cf. *5:8). மாபெரும் எதிர்காலம் ஒன்று ஏற்கனவே உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறிந்துள்ள ஊழியரை தற்காலத் தோல்வி எதுவும் ஊக்கம் இழக்கச் செய்வதில்லை. “தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடத்தல்” என்று கூறக்கூடிய கருத்து நோக்கு நம்பத்தக்க கிறிஸ்தவரின் அடையாளமாக உள்ளது.*